# innovativeputhumaipithan'sarrangaraipillayaar fiction and construction of society

# புதுமைப்பித்தனின்ஆற்றங்கரைப்பிள்ளையார்புனைவும் சமூக உருவாக்கமும்

**s. saravanajothi**[1]

***Abstract….***_The major objective of the research is to explore the social formation constructed in ArrangaraiPillayaarshort story. This research is designed is qualitative approach. Library work method is used for this study. The findings shows that, both religion and politics are predicted to be the backbone of social formation. The tasks and the downfall of the religions to social formation are stated. The tasks and their downfall of political social formation are stated. The basic ideologies of politics and religion to assimilate human society have been identified. Between these two ideologies, the human society is suffering. The researcher confirms that this study would be beneficial to identify, how the concepts of politics and religion influence the human society._

***Keywords…***_puthumaipithan, short story, religion, politics, society, social formation, ArrangaraiPillayaar._

***ஆய்வுச்சாரம்…***

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் புதுமைப்பித்தனின் ஆற்றங்கரைப்பிள்ளையார் சிறுகதையில், சமூகஉருவாக்கம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார்அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அடிப்படையில் விளக்கமுறை அணுமுறைகையாளப்பட்டுள்ளன. இவ்வாய்வில், சமயம், அரசியல் இவையிரண்டும் சமூக உருவாக்கத்திற்குப் பின்புலங்களாக இருந்து செயல்பட்டதைக் காணமுடிகின்றது. சமயத் தத்துவங்கள் சமூக உருவாக்கத்திற்கு ஆற்றிய பணிகளும் அவற்றின் வீழ்ச்சியும் கூறப்படுகின்றன. அரசியல் சமூக உருவாக்கத்திற்கு ஆற்றிய பணிகளும் அவற்றின் வீழ்ச்சியும் கூறப்படுகின்றன. அரசியலும் சமயமும் மனித சமூகத்தைத் தன்வயப்படுத்திக் கொள்வதற்கு முன்னெடுக்கும் அடிப்படைச் சித்தாந்தங்கள் கண்டறிந்துகூறப்படுகின்றன. இவையிரண்டுக்கும் இடையில் மனித சமூகம் படும்துயரம் கண்டறிந்து கூறப்படுகின்றது. சமகாலத்தில் மனித சமூகத்தைத் தன்வயப்படுத்திக் கொள்ள அரசியலும் சமயங்களும் முன்னெடுக்கின்ற கருத்தியல்களைக் கண்டறிவதற்கு இவ்வாய்வு பயனுடையாதாக இருக்கும் என்பதை ஆய்வாளர் உறுதி செய்கிறார்.

***கருச்சொற்கள்…*** புதுமைப்பித்தன், சிறுகதை, சமயம், அரசியல், சமூகம், சமூகஉருவாக்கம், ஆற்றங்கரைப்பிள்ளளையார்.

**முன்னுரை**

தமிழ்இலக்கியங்களின்தற்காலபுனைவுகள்சமகாலவரலாற்றைஎடுத்துரைப்பதில்மிகமுக்கியம்இடம்பிடித்துள்ளன. இதற்குச்சான்றாக, பெருமாள்முருகனின்மாதொருபாகன்நாவல், சமகாலபிரச்சனைகளைஎடுத்துரைத்ததன்மூலம்மிகப்பெரியவிமர்சனத்திற்குஉள்ளானார். எனவே, புதுமைப்பித்தன்எழுதியஆற்றங்கரைப்பிள்ளையார்சிறுகதைசமகாலபிரச்சனையைஎடுத்துரைக்கிறது. தமிழ்ச்சமூகஉருவாக்கத்தில்சமயமும்அரசியலும்முதன்மையானதாகஉள்ளன. இக்கருத்தியல்உலகவரலாற்றுக்கும்பொருந்தும். உலகதோற்றம், சமயத்தோற்றம், பற்றிவரலாற்று ஆசிரியர் டாயின்பிகூறுகையில், இந்திய நாகரிகத்தில் தமிழர் நாகரிகம் சிறந்தநாகரிகமாகஉள்ளன.இதில் திராவிடக்கூறும் ஆரியக்கூறும் எலும்பும் மஜ்ஜையுமாக அல்லது உயிரும் உடம்புமாக உள்ளது என்று(ராகுல்சாங்கிருத்யாயன் **(2007)** *மனிதசமுதாயம்*)டாயின்பி கூறுகிறார்.உலக நாகரிகங்களை ஆராய்ச்சி செய்த வரலாற்று ஆசிரியர் ஆர்னல்டு டாயின்பி "மனிதனுக்கு இருக்கும் இந்த ஆன்மீகம், அவன் பிறந்த இப்பிரபஞ்சத்தோடு இசைந்து வாழவேண்டும் என்ற மனப்போராட்டத்தை வாழ்நாள் காலமெல்லாம் அவனுக்குள் தோற்றுவிக்கிறது"

---

[1]The author is an Assistant Professor in Tamil, Thiagarajar College, Madurai, Tamilnadu, India.Emai:saravanajothi_tam@tcarts.in

என்பதை(ராகுல்சாங்கிருத்யாயன் **(2007)***மனிதசமுதாயம்*)என்றநூலில்குறிப்பிடுகிறார்.இவ்வகையில் தமிழர்களின் உணர்வும் உறவும் அரசியல், சமயம்வளர்த்தெடுத்ததுஎன்றுஉணரவேண்டும்.

இதில்நாகரிகம்என்றபெயரில்மனிதன்ஒருசமூகஅமைப்பைக்கட்ட மைக்கிறான்.நாகரிகம் என்பது நேர்மறை எதிர்மறை என்ற இருநிகழ்வுகளைத் தன்னகத்தே கொண்டன. இவை நேர் கோட்டில் நிகழும் போது மனிதன் நன்மை அடைகின்றான். அதே நேரத்தில், எதிர் விளைவுகள் வீழ்ச்சியை நோக்கி நிகழ்கின்றன. இத்தகைய நிகழ்வுகளைத் தீர்மானிக்கின்ற காரணிகளாக சமயமும் அரசியலும் தான், தோற்றுவிக்கப்பட்ட காலந்தொட்டே விளங்கி வந்திருக்கின்றன. மனிதனின் நசிவுகளையும், வளர்ச்சியையும் வார்த்தெடுக்கின்ற கருவிகளாக சமயமும்அரசியலும்இருந்தமையால் இவை போன்ற கருத்தியல்கள் கலை இலக்கிய மரபில் வளர்ந்தது எனலாம். இத்தகைய கலை இலக்கிய வளர்ச்சிப் பாதையில் பலவிதப் பனுவல்கள் நகல் செய்யப்பட்டு வரப்பட்டிருப்பினும் சிலரது பிரதிகளே மேற்கூறப்பட்ட கருத்தியல்களைத் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளன. இவ்வெளிப்படுத்துதலில் புதுமைப்பித்தன் தனக்கான இடத்தைத் தகவமைத்துள்ளமையை ஆற்றங்கரைப் பிள்ளையார் என்ற புனைவின் வழியாக இனங்காண முடிகிறது.

ஆதி காலத்தில் அல்லது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மிருகமும் மனிதனும் கலந்த கலவையாக மனிதன் காணப்பட்டான். இவன் நாகரிக முகத்தான் முந்தியடித்துக் கொண்டு வாழ்வியல் அம்சங்களை எப்படியாவதும் புதுமைப்படுத்தி வாழ்ந்திட வேண்டும்என்றுஎன்னினான். இச்சூழலில் சமயமும் அரசியலும் பின்னிப் பிணைந்து நிகழ்த்திடும் சமூகஉருவாக்கம்குறித்து விவாதிப்பதுமுக்கியமானதாகும். எனவே, சிறுகதைவழிசமூகஉருவாக்கஅரசியலைஆராய்வதாகஇவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வுமுன்னோடி**

தமிழ்சிறுகதைகள்குறித்தஆய்வுகள்தொடர்ச்சியாகநிகழ்த் தப்பட்டுவருகின்றன. இவ்வாய்வுகள்பெரும்பாலும்உருவம்உள்ளடக்கத்தைஅடிப்படை யாககொண்டுஅமைகின்றன. புதுமைப்பித்தன்குறித்துபல்வேறுதலைப்புகளில்ஆய்வுகள்நிகழ்த்த ப்பட்டுள்ளன. புதுமைப்பித்தன்படைப்புகளில்அரசியல், சமூகம், மொழிநடை, தொன்மம்,சமூகவரலாற்றுப்பின்புலத்தில்புதுமைப்பித்தன்என்றுப ல்வேறுதலைப்புகளில்ஆய்வுநிகழ்த்தப்பட்டுள்ளன. ஆற்றங்கரைப்பிள்ளையார்கதையில்உள்ளீடாகஅமைந்தகுறியீட் டுஅரசியலைஎடுத்துரைக்கின்றமுதல்ஆய்வாகும்.

ராகுல்சாங்கிருத்யாயன் (2007) எழுதிய*மனிதசமூதாயம்*என்றநூலில்,காட்டுமிராண்டிமனிதசமூதா யாம், நாகரிகமனிதசமூதாயம், இந்தியசமூதாயம், பத்தொன்பதாம்நூற்றாண்டுமனிதசமூதாயம்என்றுவிரிவாகஎடுத்து க்கூறப்படுகிறது.

நொபொருகராஷிமா (2017) எழுதிய*வரலாற்றுப்போக்கில்தென்னகச்சமூகம்*என்றநூலில்சோழர் காலநிலவுடைமைச்சமூகம்குறித்துவிரிவாகஎடுத்துக்கூறப்படுகிற து. நிலவுடைமைசமூகஉருவாக்கத்தில்சோழர்களின்அரசியல்முறையி னைதொல்லியல்சான்றுகள்கொண்டுஎடுத்துரைக்கின்றன.

*சமூகவரலாற்றுப்பின்புலத்தில்புதுமைப்பித்தனின்துன்பக் கேணி*என்றகட்டுரைஉங்கள்நூலகத்தில்ஆ.சிவசுப்பரமணியன் (மார்ச் 2014) அவர்களால்எழுதப்பட்டது. ஆங்கிலப்பாராளுமன்றநேரடிஆட்சியின்கீழ் 1858இல்இந்தியாவந்தது. இக்காலகட்டத்தில்வேளாண்மைமுறைகளில்நீர்பாசனவாசதிதடை செய்யப்பட்டது, இரய்த்துவாரிமுறைஅறிமுகப்படுத்தப்பட்டுநிழக்கிழார்உருவாக்க ம், பஞ்சம்போன்றவைநிலவிவந்தனஎன்பதைப்புதுமைப்பித்தன்துன்ப க்கேணியில்கண்டறியப்பட்டுஎடுத்துரைக்கப்பட்டன.

புதுமைப்பித்தன்கதைகளில்சமூகஅரசியலைஉள்ளடக்க மாகவைத்துஎழுதுவதுஒருஉத்தியாகும். இவருடையகதைகளில்சமூகஉருவாக்கம்குறித்துஆ.சிவசுப்பரமணி யன்எழுதியஆய்வுமுக்கியமானதாகும். இதேசிந்தனையில்புதுமைப்பித்தனின்ஆற்றங்கரைப்பிள்ளையார்க தையைஆய்வதுமுக்கியமானதாககருத்தப்பட்டது. இக்கதையில்அரசியலும்சமயமும்குறீட்டுவடிவில்எடுத்துரைக்கப்ப டுகிறது. அரசியல்அரசமரமாகவும், சமயம்வேப்பமரமாகவும், பிள்ளையார்மனிதசமூகமாகும்கட்டமைக்கப்பட்டுள்ளது. எனவே, ஆய்வாளர்குறியீட்டுவடிவில்அமைந்தகதைக்கூறுகளைப்பிரித்துஇ வற்றில்அமைந்துள்ளசமூகஉருவாக்கஅரசியலைகண்டறிந்துகூறு வதாகஇவ்வாய்வுஅமையப்பெறிகிறது.

**ஆய்வுநெறிமுறைகள்**

இவ்வாய்வுபண்புசார்அணுகுமுறையில், நூலாய்வுஅணுகுமுறைகையாளப்பட்டுள்ளன. நூலாய்வில்ஆய்வுக்குதேவையானநூல்கள், கட்டுரைகள், தேர்ந்தெடுக்கப்பட்டுவிளக்கமுறைஅணுகுமுறையில்தரவுகள்சேக ரிக்கப்பட்டுள்ளன. தரவுகள்முழுமையாகசேகரிக்கப்பட்டுநிரல்படுத்தப்பட்டுஆய்வுமே ற்கொள்ளப்பட்டன. ஆய்வுமுன்னோடிகளின்கருத்தியல்முழுமையாகஉள்வாங்கப்பட்டு

IJSER

இவற்றிற்குஅடுத்ததளத்திற்குஎடுத்துச்செல்லும்விதமாகஇவ்வாய்வுஅமையப்பெறுற்றுள்ளன.

**நாகரிகக்கட்டுமானத்தின்சமூகஅரசியல்உருவாக்கம்**

புதுமைபித்தன்ஆற்றங்கரைப்பிள்ளையார்கதையில் "ஊழிக் காலத்திற்கு முன் கி.மு.(கிறிஸ்து பிறப்பதற்கு முன்) என்ற அளவுகோல்களுக்கு எட்டாத சரித்திரத்தின் அடிவானம். அப்பொழுது நாகரிகம் என்ற நதி காட்டாறாக ஓடிக் கொண்டிருக்கிறது" என்றுகதையின்தொடக்கமாகஅமைகிறது. நாகரிகத்தின் தாயகம் நதிகள் என்ற கருத்தமைவு புனைவாக்கத்தின் வழி கண்டறிய முடிகிறது. நதியோரங்களில் நாகரிகம் தோன்றிய போதிலும், இப்பிரபஞ்சத்தில் நாகரிகத்தை உட்கிரகித்துக் கொண்ட உயிர் மனிதன்என்று குறிப்பிடலாம். தொடக்க காலத்தில் மனிதன் நதியோரங்களில் தனது குடியேற்றத் தளங்களை அமைத்துக் கொண்டான். இம்மனிதனைப்புதுமைப்பித்தன் மிருகம் பாதி, கடவுள் பாதி இரண்டும் கலந்த கலவை என்கிறார். ஆகையால் மனிதன் இரட்டைப் பரிணாமத்தின் வடிவம். இத்தகைய வடிவத்திற்கு நல்ல சான்றாக பிள்ளையார் என்ற குறியீட்டை மனிதனின் மாற்று வடிவமாக புனைவாக்கம் செய்கிறார். நதியோரங்களில் வாழ்ந்த மனிதன் ஆற்றில் அடிக்கடி பிள்ளையாரை (மனிதனை) மூடி அவரைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தான். இவ்வாறு பருவ காலங்களின் சீற்றத்தால் மனிதன் சமூகம் என்ற மேடையைக் கட்டி அதன் மேல் குடியேறினான். பின்னர் வாழ்வியல் கூறுகளைச் சீர்படுத்தி செயல்படுத்துவதற்குச் சமயம், அரசியல் என்ற இரு சிந்தனாதிக்கங்கள் தலைதூக்கின. இதனை உணர்த்தும் வகையில் புதுமைப்பித்தன் சமய தர்மம் என்று அரச மரத்தையும், இராஜ தர்மம் என்று வேப்ப மரத்தையும் குறியீட்டு வடிவில் பயன்படுத்துகிறார். இந்த இரண்டு மரங்களின் விளையாட்டில் புறச்சூழல்களும் தொத்திக் கொண்டு வினையாடல்களை நிகழ்த்தின. இதுவே நாகரிகக் கட்டுமானத்தின்அடிப்படையிசமூகஅரசியல்உருவாக்கமாகும்.

**சமயம்மற்றும்அரசியல்ஊடகங்களில்மனிதனின்ஊடாட்டம்**

இவ்வுலகம் தோன்றிய நாள்தொட்டு மக்களிடையே ஏதோவொரு நெகிழ்ச்சியின் ஊடாக சமயம் மற்றும் அரசியலின் வளர்ச்சி நிலவி வந்தது. காலத்தின் வீச்சில் மனிதனின் அறிவு முதிர்ச்சிக்கேற்ப பல்வேறு சிந்தனைத் தளங்களில் பல படிநிலைகளாக வளர்ந்து வந்தன.இக்கருத்துஇலக்கியத்தளங்களில்புனைவாக்கஉள்ளடக்கமாகஉட்புகுந்தன. தமிழில்தோன்றியமுதல்இலக்கியவைதிணைக்கோட்பாட்டுஅடிப்படையில்தோன்றியதாகும். "சங்ககாலதிணைக்கோட்பாடுசூழலியல்பின்புலம்சார்ந்தததது. அறஇலக்கியம்திணைக்கோட்பாட்டுசூழலியல்உள்ளமக்களின்ஒழுகலாறுகள்எடுத்துக்கூறுகிறது. திணைஇலக்கியநீழ்ச்சிஅறஇலக்கியங்களிலும்ஒழுகாலாற்றுப்பின்புலத்தில்தொடர்கிறது" (Saravanajothi, S. (2020), ***Ethic literature and tradition of thinnai theory, p.29.***)என்றகருத்தின்மூலம்இயற்கைவழிபாடுதிணைச்சமூகத்திலும், ஒழுக்கம்சமயஉருவாக்கப்பின்புலத்திலும்சமூகத்தில்உட்புகுந்தன. இத்தகைய கருத்தியல்களின் பின்னமைவில் இருந்த சமயம், அரசியல் மனிதனின் உயிரோடும் உடலோடும் ஒன்றி நின்றன. இவ்வளர்ச்சி என்பது, வண்டல் மண்ணின் வளத்தில் சமயத்தின் குறியீடான அரசமரமும் அரசியலின் குறியீடான வேப்பமரமும் இவ்விரண்டு மரங்களும் ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டு மிகவும் செழிப்பாக நெருங்கி வளர்ந்தது. இவ்விரண்டு சிந்தனாதிக்கத் தளங்கள் தமது ஊடாட்டங்களை நிகழ்த்தின. மழைக்காலத்தில் எப்பொழுதும் ஈரம் சொட்டிக் கொண்டே இருப்பதானல் பிள்ளையார்க்கு நடுக்கு வாதம் ஏற்பட்டு விடும் போலிருந்தது. மேலும் கிளைகளில் பட்சிகள் கூடு கட்டிக் கொண்டு பிள்ளையாரின் மேல் எல்லாம் அசுப்படுத்தின. மனிதனின் நிழல்களாக இருந்த சமயம், அரசியல் போன்ற இருமரங்கள் அசுத்தப்படுத்துவதிலும் நடுக்குவாதம் ஏற்படுத்துவதிலும் தனது முழு கவனத்தைச் செலுத்தின. இவ்விரு ஆதிக்கத் தளங்களிலிருந்து விடுபட முடியாத மனிதன் அன்றாட வாழ்க்கையை ஒழுங்குடன் நடத்துவதற்கு அமைத்துக் கொண்ட நன்னெறிகளின் தொகுதியைச் சமயம்.இச்சமயக்கருத்தினைஅரசியலிடமிருந்தே பெறவேண்டிய நிர்பந்தம் நிலவியது. இருப்பினும் மதக் கருத்தியல்களுக் குள்ளேயே எதனை ஏற்பது! மறுப்பது! என்ற உரிமை மனிதனுக்குத்தரப்பட்டது. இதுவே, மனிதன் அடைந்த வெற்றியெனக் குறிப்பிடலாம்.

**புனைவுக்கட்டுமானகருத்தமைவில்சமயஅரசியல்**

புனைவுக் கட்டுமானம் குறித்து புதுமைப்பித்தன் குறிப்பிடும் போது நான் கதை எழுதுவதற்காக நிஸ்ட்டையில் உட்கார்ந்து யோசித்து எழுதும் வழக்கமில்லை. என் கதைகளில் எதையாவது ஒன்றைக் குறிப்பிட்டு அது பிறந்த விதத்தைச் சொல்வதென்றால் ரிசிமூலம் நதிமூலம் காணுகிற மாதிரிதான் என்கிறார். இவ்வகையில் ஆற்றங்கரைப் பிள்ளையார் புனைவு பிரதிகர்த்தாவின் நிஷ்டையில் தோன்றவில்லை.இக்கதை, ரிசிமூலம் நதிமூலம் காணப்புகுவது போல் மனிதனின் ஆதிகால வரலாற்றில் தொடங்கி, சமயம், அரசியல் என்ற ஆதிக்க சிந்தனையின் ஊசலாட்டங்களை நடப்பு நாள்வரை காட்டுகின்ற கதைக் கட்டுரை எனலாம். இவ்வகையில் இயற்கையின் பரிணாம வினோதங்களில் மிகவும் அபூர்வமான, விந்தையான இயற்கையின் சிகரம்மனிதன். இவனிடந்தான் அறிவு என்ற ஒரு புதுவிதமான பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. அறிவின் வளர்ச்சிஅது ஒரு தனிப்பெரும் பாரதம். அறிவு விளக்குஎடுத்துச் சென்ற வழிதான் நாகரிகம். இதனை, வார்த்தெடுப்பதில் முந்தியடித்துக் கொண்டனர்

சமயவாதிகள். பின்னர் அக்காலங்களில் நடந்த ஆட்சிப்பீட அரசியல் நிகழ்வுகளும் இதனுடன் இணைந்து கொண்டனஎன்றுபுதுமைப்பித்தன்சமயஅரசியலைமுன்வைக்கிறார்.

**அ. சமணம், பௌத்தம்**

பசுபதி என்ற கருத்து, தாய்மை வழிபாடு, யோகப் பயிற்சி என்று சிந்துவெளி நாகரிகத் தளத்தில் நிலவிய சமயச் சிந்தனையும் அரசியலும் இணைந்து சமணம் பௌத்தம் என்ற போதனைவாதிகள் தோன்றினர். இவர்கள் துன்பத்தில் இருப்பவர்களின் இடர்பாடுகளைப் போக்குவதே எங்கள் பணிஎன்ற மனித இன்ப வாதத்தை முன்வைத்தனர். இக்கருத்தியல்திணைஇலக்கியத்தில்தொடங்கி, அறஇலக்கியத்தில்பின்தொடர்ந்துநவீனஇலக்கியம்வரைஅமைந்துள்ளன.

“சமூகஉருவாக்கத்தின்எழுதுகோலாகஅறஇலக்கியம்அமைகின்றன”. (Saravanajothi, S. (2020), *Construction of Ethics in Cirupancamulam, p.884*).எனவே, இலக்கியங்களுக்குள்சமயங்களின்சமூகஉருவாக்கநுண்ணரசியல்புனைவுகளில்உள்ளடக்கமாகப்பின்னப்படுகின்றன.இப்புனைவிலும்சமயநுண்ணரசியலைக்கட்டமைப்பைக்காணமுடியும்.இக்கதையில்பெரும்ஆற்றுவெள்ளத்தில்பிள்ளையார்அடித்துவரப்பெற்றார்என்றுஆரம்பிக்கின்றது. “ஒரு கிழவர் வந்தார்.பிள்ளையாரின் கதியைக் கண்டு மனம் வருந்தினார். பிள்ளையாரைக் காப்பாற்ற அவருக்கு ஒரு வழி தோன்றிற்று.சமூகம்என்ற ஒரு மேடையைக் கட்டி, அதன் மேல் பிள்ளையாரைக் குடியேற்றினார். அவருக்கு நிழலுக்காகவும், அவரைப் பேய் பிடியாதிருக்கவும், 'சமய தர்மம்' என அரச மரத்தையும், 'ராஜ தர்மம்' என்ற வேப்ப மரத்தையும் நட்டுவைத்தார்.வெள்ளத்தின் அமோகமான வண்டல்களினால் இரண்டு மரங்களும் செழித்தோங்கி வளர்ந்தன.பிள்ளையாருக்கு இன்பம் என்பது என்னவென்று தெரிந்தது.தனக்கு உதவி செய்த பெரியாரின் ஞாபகார்த்தமாக 'மனிதன்' என்ற பெயரை தனக்குச் சூடிக்கொண்டார்”.(ஆ. இரா. வேங்கடசபதி (2016) *புதுமைப்பித்தன்கதைகள்*) என்றுகுறிப்பிடுகிறார். இப்படிபிள்ளையார் (மனிதன்பாதிமிருகம்பாதி) மனிதவடிவம்பெறுகிறார்.

இரண்டு மரங்களும் ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு மிகவும் செழிப்பாக நெருங்கி வளர்ந்து, பிள்ளையாருக்கு சூரிய வெளிச்சமே படமுடியாமல் கவிந்து கொண்டன. மழைக் காலத்தில் எப்பொழுதும் மரங்களிலிருந்து ஈரம் சொட்டிக்கொண்டே இருந்ததினால் பிள்ளையாருக்கு நடுக்குவாதம் ஏற்பட்டுவிடும் போலிருந்தது. மேலும் கிளைகளில் பக்ஷிகள் கூடு கட்டிக்கொண்டு, பிள்ளையாரின் மேல் எல்லாம் அசுத்தப்படுத்தின.பிள்ளையாரைப் பார்க்க வெகு பயங்கரமாக இருந்தது. அப்பொழுது இரு கிழவர்கள் வந்தனர்.கோர உருவத்துடன் விளங்கும் பிள்ளையாரைக் கண்டதும், இருவரும் ஆற்றுக்கு ஓடி ஜலம் எடுத்து வந்து முதலில் அவரைக் குளிப்பாட்டினார்கள்.ஒரு கிழவருக்கு ஒரு யோசனை தோன்ற, கையில் மண்வெட்டியுடன், வெகு வேகமாக ஒரு பக்கமாகச் சென்று மறைந்தார்.மேலிருந்த அசுத்தங்கள் போனதினால் உண்டான ஒரு சந்தோஷத்தினால், பிள்ளையார் எதிரிலிருந்த கிழவருடன் பேசலானார்: "என்னை முன்பின் அறியாத நீங்கள் செய்த உதவிக்கு, உங்கள் இருவருக்கும் எனதன்பைத் தவிர வேறு நான் என்ன கொடுக்க முடியும்? உங்கள் பெயரென்ன, உங்கள் நண்பர் பெயர் என்ன?" (ஆ. இரா. வேங்கடசபதி (2016) *புதுமைப்பித்தன்கதைகள்*) என்றுகுறிப்பிடுகிறார். அதற்கு அந்தக் கிழவர் பதில் சொல்லுகிறார், "பிள்ளையாரே! கஷ்டத்திலிருப்பவருக்கு உதவி செய்பவருக்கு பிரதியுபகாரம் வேண்டுமா? அதை நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. எனது பெயர் 'புத்தன்'; என்னுடன் வந்தவர் என் நண்பரல்ல; அவரை வழியில்தான் சந்தித்தேன். அவர் பெயர் 'ஜீனன்' (ஆ. இரா. வேங்கடசபதி (2016) *புதுமைப்பித்தன்கதைகள்*) என்றுகுறிப்பிடுகிறார். என்றார்.கிழவருக்கு பளிச்சென்று ஒரு யோசனை யுதித்தது. ஒரே பாய்ச்சலில் மரத்தின் மேல் ஏறி, பக்ஷிகள் கூடு கட்டுவதற்கு வசதியாயிருந்த கிளைகளை எல்லாம் வெட்டவாரம்பித்தார்.இத்தனை நாட்களாக இருளிலும் நிழலிலும் இருந்து வந்த பிள்ளையாருக்கு, திடீரென்று பட்ட சூரிய கிரணங்களைத் தாங்க முடியவில்லை. மேலெல்லாம் சுட்டுக் கொப்புளிக்கவாரம்பித்தது. கண்களைத் திறக்க முடியாமல் கூசுகிறது. "நல்ல வேளை செய்கிறீர்! போதும் உமது உதவி" என்று கோபித்து, "இந்தக் கிளைகளினால்தான் உமக்கு." என்று கிழவர் பதில் சொல்லுமுன், தனது தும்பிக்கையால் அவரைத் தூக்கி வீசினார். கிழவர், மேடைக்கு வடகிழக்கில், வெகுதூரத்தில் போய் விழுந்தார். (ஆ. இரா. வேங்கடசபதி (2016) *புதுமைப்பித்தன்கதைகள்*) என்றுகுறிப்பிடுகிறார். வடகிழக்குபகுதிகளில்பௌத்தம்வளர்ச்சிபெற்றதைக்குறிப்பிடுகிறார்.

கிழவர் சற்று நேரத்தில் மண்வெட்டியுடன் சென்ற, பிள்ளையாரை அணுகி, "நான் புதிதாக மேடை ஒன்று கட்டியிருக்கிறேன். அதில் அந்தக் கஷ்டம் ஒன்றும் இல்லை; என்று சொல்லி அவரைத் தூக்கிக் கொண்டு போய், தான் தயாரித்த இடத்தில் உட்காரவைத்து, "இதோபாரும்! இதில் மரங்களே இல்லை; உமக்கு அங்கிருந்த கஷ்டம்" (ஆ. இரா. வேங்கடசபதி (2016) *புதுமைப்பித்தன்கதைகள்*) என்று சொல்லி முடிக்குமுன் அவ்விடத்திலிருந்த உஷ்ணத்தைத் தாங்கமுடியாத பிள்ளையார், கண்ணை மூடிக்கொண்டு ஒரே ஓட்டமாகத் தனது பழைய மேடையில் வந்து உட்கார்ந்துகொண்டார். "உங்கள் இருவருக்கும் உதவிசெய்வது என்றால் பிறரைத் துன்பப் படுத்துவது என்ற நினைப்பா? சற்று முன்புதான், உமது நண்பன், உம்முடன் வந்தவன், எனது அருமையான மரங்களை வெட்டி உடம்பெல்லாம் கொதிக்கும்படி செய்துவிட்டான். கண்ணை மூடிக் கொண்டு சிவனே என்றிருந்த என்னை, நீர் வெகு புத்திசாலித்தனமாக

ISSN 2229-5518

கட்டிவிட்ட உமது மொட்டை மேடையில் போட்டுப் பொசுக்கி விட்டீரே, போதும் உமது உதவி. நீர் சும்மா இருந்தால் போதும்" (ஆ. இரா. வேங்கடசபதி (2016) *புதுமைப்பித்தன்கதைகள்*) என்று சொல்லிவிட்டுக் கோபத்துடன் கண்களை மூடிக்கொண்டு இருந்தார்.பிள்ளையாரின் மனநிலையைக் கண்ட கிழவர், பெரிதும் ஏமாற்றமடைந்து, தானே அந்த மேடையில் உட்கார்ந்து தனது உயிரை விட்டார்.

இவ்வகையில் பனிகளின் எச்சங்களிலிருந்தும் மரக்கிளையின் ஈரத்தால் ஏற்பட்ட நடுக்குவாதத்திலிருந்தும் ஏற்பட்ட துன்பங்களை நீக்கும் விதமாக மரக்கிளைகள் வெட்டப்பட்டன. இதன் விளைவாக சூரிய கிரகணங்களின் தாங்க முடியாத வெப்பம் பிள்ளையார்க்கு ஆத்திரமூட்டியது. தனது தும்பிக்கையால் வடகிழக்கில் புத்தர் தூக்கி எறியப்பட்டார். சீனா, பர்மா, மலேசியா, தாய்லாந்து என்று வடகிழக்குப் பகுதியில் அமர்ந்து கொண்டார். ஆனால் சமணர் ஒரு மேடை கட்டி அதன் மேற்பரப்பில் அமர்ந்து தன் உயிரை நீத்தார். இவ்வாறு சமணமும் பௌத்தமும் தமது இருப்பை இழந்தன.

**ஆ. சீக்கியமும்வேதாந்திகளும்**

நாகரிகம் என்ற நதி வடமேற்கில் உள்ள பஞ்சாப் பகுதியிலிருந்து ரோஜா செடியுடன் கைலி கட்டிய தாடிக் கிழவனை அடித்து வந்தது. இந்த கிழவன் குருநானக், சமயநெறியைக் கடந்து அரசியல் வேரைப் பிடித்துக் கொண்டு சீக்கியம் என்ற புதிய மதத்தை நிறுவினார். அதே காலத்தில் சங்கரர், இராமானுஜர், மத்துவர் தங்களால் இயன்றவரைத் தலை, கை, கால், வயிறு, அரசமரம், வேப்பமரம் என்று பல தளங்களில் தங்களின் வேதாந்த மரபை மனித உயிர்களுக்குள் உட்புகுத்த முயன்றனர். இடையிடையே சீக்கியம் தனது வாளை மனிதனின் அறிவிலே கூர்மைப்படுத்திக் கொண்டது. இவ்வகையில் மனித உயிர்கள் நாகரிகம் என்ற பெயரில் சமயவாதிகளிடமும் அரசியலின் உள்ளீடுகளிலும் மாட்டிக் கொண்டு எப்படி விலகுவது என்று தெரியாமல் சீழ் வடிப்பது போல் அழுது புலம்பிக் கொண்டிருந்தன. அரசியலும்சமயமும்இணைந்துமனிதனைதுன்புறுத்தின. வேதாந்திகளின்போதனைகளில்மாட்டிக்கொண்டமனிதசமூகத்தி ன்நிலையைபுதுமைப்பித்தன்எடுத்துரைக்கிறார்.

**இ. கிறித்துவம்**

மேற்குப் பகுதியில் இரண்டு மிகப்பெரிய உலக யுத்தம் வந்தது. நதிக்குள் கடல்நீர் புகுவது போல், புயற்காற்றைப் போல் மேற்கத்தியவர்கள் எல்லாவற்றையும் நாசம் செய்து கொண்டு வந்தனர். உலகம், உயிர், இறைவன் என்ற மூன்று பிணிகளில் சிக்கித் தவித்த மனிதன் தோல் பாதரட்சையும், சிலுவையும் உடையவனுடைய தோளில் தூங்கினான். மேற்கிந்தியர்கள் அரசியல் நன்றாக தெரிந்த காரணத்தால் கொழுக்கட்டை தின்று பழகிய பிள்ளையார்க்கு ரொட்டித் துண்டுகளைக் கொடுத்து, தமது இருப்பை நிலைநாட்டினார்கள். இதற்குப் பின்னரும் பல மதவாதிகள், அரசியல்வாதிகள் வந்து, ரொட்டித் துண்டுகளிலிருந்து விடுபட்டால் போதுமென்று ஓடி மறைந்தனர். பிள்ளையார்(மனிதன்)தான் பெரிதாவது போல் கனவு கண்டு கொள்கிறார். இவ்வாறு புனைவுக் கட்டுமானத்தில் நாகரிகம் என்ற பெயரில் மனிதனின் முதுகு, மார்பு, தலை, கால், கற்பு என உடற்கூற்றின் பலதளங்களில்சமயமும்அரசியலும்தன்னுடையஒழுக்கப்போதனை கள் நிகழ்த்தின. என்பதை இக்கதையில் இனங்காண முடிகிறது.

**முடிவுரை**

நாகரிகக் கட்டுமானம் என்ற பெயரில் சமயமும் அரசியலும் மனிதனின் உடற்கூற்றில் வினைபுரிகின்ற இச்சூழலில் மூன்று வினாக்களைக் கேட்டுக்கொண்டு கதையை முடிக்கிறார் புதுமைப்பித்தன்.

1. விஸ்வரூபம் எடுக்கப்படுமா?
2. விடுவிக்கப்படுவாரா?
3. விடுவித்துக் கொள்வரா?

என்ற வினாக்களைக் காலந்தோறும் மனிதர்கள் சமயவாதிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் பிடிபட்டுக் கொண்டும் கேட்டுக் கொண்டும்தான் இருக்கிறார்கள்.சமயம்தன்னுடையபோதனைகளைஏற்றுக்கொண் டுமனிதன்வாழ்வதாஅல்லதுமறுப்பதாஎன்றவிவாதம்தோன்றியது. அரசியல்தனித்துஇயங்கமுடியாமல்சமயத்தின்கட்டுபாட்டில்இயங் கியது.

இதனால்மனிதசமூகத்திற்குஅரசியல்மீதும்சமயத்தின்மீதும்வெறுப் புஏற்பட்டது.

இந்தவெறுப்புதிராவிடச்சிந்தனைமரபில்பெரியாரியமாகதோற்றம் பெற்றது.

சமூகத்தில்தோன்றும்ஒழுக்கவிதிகளில்காணலாகும்போதமைத்தன் மையைமேற்கூறப்பட்டசமூகஉருவாக்கப்பின்புலத்தில்புரிந்துகொ ள்ளவேண்டும். இதன்பின்னனியில்சாதியம், பெண்ணியம்போன்றகருத்தியல்தோற்றங்களையும்புரிந்துகொள்ள வேண்டும்.

**REFERENCE**

[1]Noboru Karashima, (2017), Subburayalu., Ea., Sanmugam., Pa., Rajagobal., Su., Bungunran.,R., Thiyagarajan.,ela., Rajavelu.,su., Sivanantham.,mu.,(Tamil) ***varalaatruppookkilthennakachsamugam,*** Chennai: Bharathiputhakalayam.

[2] RhulSankrityayan., (2007)., Ethirajulu., AG., ***Manithasamuthayam***., Chennai: New Century Book House.

IJSER © 2020
http://www.ijser.org

ISSN 2229-5518

[3] RhulSankrityayan., (2017)., Ethirajulu., AG., Parthasarathy., R., (Tamil) ***Bowtha ThathuvaIyal***., Chennai: New Century Book House.
[4] Saravanajothi, S. (2020), ***Ethic literature and tradition of thinnai theory,***Journal Of Tamil Studies, Vo 1 No1., https://ejournal.upsi.edu.my/index.php/JTS/index.
[5] Saravanajothi, S. (2020), **Construction of Ethics in Cirupancamulam,**International Journal of Research and Analytical Reviews(IJRAR), Volume 7, Issues 2., www.ijrar.org.
[6] Thamizannal, (2009). ***History of Tamil Literature***, Madurai: Sinthamanipthippagam.
[7] Venkadasabathi., A., Era., (2016), ***piuthumaipithankathaikal*,** Nagercoil**:** kalachuvadupathippagam.

IJSER